Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**S.T.C.No.356/2022**

**Deposition of PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவமுருகன் | ஜாதி | : |
| த/பெ | : ராமசாமி | தொழில் | : விவசாயம் |
| கிராமம் | : நடுப்பட்டி | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : 51/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2023.

(Accused Present)

முதல் விசாரணை

நான் நடுப்பட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். (சாட்சி விபத்தில் தலையில் காயம் ஏற்பட்டதால் தடுமாறி திக்கி திக்கி பேசுகிறார்). கடந்த 10.04.2021 அன்று காலை 08.00 மணிக்கு நடுப்பட்டியில் இருந்து கிளம்பினோம். என்னுடன் ராமு, நாகராஜன் ஆகியோர் வந்தார்கள். டிராக்டரை நான் தான் ஓட்டி சென்றேன். நடுப்பட்டியில் இருந்து வரும்போது புதுக்கோடாங்கிபட்டி பிரிவில் கிராஸ் ஆன போது நான் வேகத்தடை இருந்ததால் ஹாரன் அடித்து மெதுவாக சென்றபோது அரசு பேருந்து அதிவேகமாக வந்து டிராக்டர் மீது மோதி விபத்து ஏற்பட்டது எனக்கு தலை, முழங்கால், இடுப்பு, ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. ராமுவிற்கு தலை, தோள்பட்டை, இடுப்பில் காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்துள்ளார். எனக்கு தலை, இடுப்பு,காலில் தையல்போட்டுள்ளார்கள். நாகராஜ்க்கு தலை, இடுப்பு, உடம்பில் காயம் ஏற்பட்டது. பின்பு சிகிச்சைக்காக திண்டுக்கல்அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அரசு பேருந்தை நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி இருக்கும் எதிரி தான் அன்றைய தினம் ஓட்டி வந்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

P JAISANKAR Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate,
Athoor